இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 23-09-2025

# வேலுநாச்சியாருக்குச் சிறப்பு

வீரமங்கை வேலுநாச்சியார் சிலையைத் தலைநகர் சென்னையில் அமைத்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். வேலூரில் இருக்கும் காவலர் பயிற்சி மையத்துக்கு வேலுநாச்சியார் பெயரைச் சூட்டி இருக்கிறார் முதலமைச்சர்.

**இந்திய விடுதலைப் போராட்டத்தின் மாபெரும் அடையாளங்களில் ஒருவர் வேலுநாச்சியார். ஆண்கள் கோலோச்சிய போர்க்களத்தில் தனித்துத் தெரியும் தனிப்பெரும் பெண் ஆளுமை அவர். இந்திய விடுதலைக்காகப் போராடிய முதல் பெண் அரசி இவரே.**

முத்து வடுகநாதரின் நினைவிடத்தில் தனது தாலியைக் காணிக்கையாக்கி களத்தில் குதித்தார் அவரது மனைவி வீரமங்கை வேலுநாச்சியார். தனது கணவரைக் கொலை செய்தவர்களைத் தோற்கடித்தார்.

வேலுநாச்சியாருக்குப் பின் அவரது மகள் வெள்ளச்சி நாச்சியார் ஆட்சி செலுத்தி மக்களைக் காத்தார்.

இப்படிக் குடும்பம் குடும்பமாக மண்ணைக் காத்தது சிவகங்கை மண்!

இராமநாதபுரம் மன்னர் செல்லமுத்து சேதுபதிக்கும், சிவகங்கை அருகே உள்ள சக்கந்தி என்னும் ஊரைச் சேர்ந்த முத்தாத்தாள் நாச்சியாருக்கும் 1730-ஆம் ஆண்டு வேலுநாச்சியார் பிறந்தார். போர்க் களம் சென்று வாளெடுத்து போர்புரியும் பயிற்சியை இளமையிலேயே பெற்றார். சிலம்பம், வாள்வீச்சு, ஈட்டி எறிதல், அம்பு விடுதல், குதிரை ஏற்றம், யானை ஏற்றம் ஆகிய திறமைகளை இளமையிலேயே பெற்றார். பல்வேறு மொழிகளில் புலமை பெற்றார். ஆறு மொழிகள் தெரியும். ஆங்கிலேயரிடம் ஆங்கிலம், பிரெஞ்சு மொழியில் பேசினார்.

சிவகங்கைச் சீமையின் இரண்டாவது மன்னர் (1750-1772) முத்துவடுகநாத தேவருக்கும் வேலுநாச்சியாருக்கும் 1746-ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. அவரது பட்டத்து ராணியானார்.

முத்துவடுகநாதர், ஆற்காடு நவாப் முகமது அலிக்குக் கப்பம் கட்ட மறுத்தார். அதன் காரணமாகக் கம்பெனிப் படையும், ஆற்காடு நவாபின் படையும்இணைந்துகாளையார்கோவிலில்தங்கியிருந்தமுத்துவடுகநாதர் மேல் போர் தொடுத்தன. இதில் வீர மரணம் அடைந்தார் முத்துவடுகநாதர்.

கணவர் இறந்துவிட்டார் என்று அழுது புலம்பாமல், வீட்டுக்குள் முடங்காமல் படை திரட்டினார் வேலுநாச்சியார். விருப்பாட்சி சென்றார். விருப்பாட்சி மன்னர் கோபால் அவருக்கு உதவிகள் செய்தார். வேலுநாச்சியாரைக் கொல்ல கொலையாளிகளை அனுப்பினார்கள். ஒற்றவர்கள் வந்தார்கள். அத்தனை சதிகளையும் முறியடித்தார் வேலுநாச்சியார். அங்கிருந்தபடியே மைசூர் மன்னர் ஹைதர் அலியின் நட்பை பெற்றார். ஐயாயிரம் குதிரை வீரர்களையும், ஐயாயிரம் போர் வீரர்களையும் ஹைதர்அலியிடம் கேட்டார் வேலுநாச்சியார். அவரும் வழங்கினார்.

வேலுநாச்சியார் தலைமையில், மருது சகோதரர்கள் வழிகாட்டுதலில், இந்தப் படைகள் சிவகங்கை நோக்கிச் சென்றன. மதுரை கோச்சடையில் இரண்டு தரப்புக்கும் நடந்த சண்டையில் வேலுநாச்சியார் வெற்றி பெற்றார். நவாப் படைகளையும், கம்பெனி படைகளையும் விரட்டினார் வேலுநாச்சியார். எட்டு ஆண்டுகள் போராடினார். இறுதியில் வென்றார்.

சிவகங்கை கோட்டையை 1780-ஆம் ஆண்டு கைப்பற்றினார் வேலுநாச்சியார். பெரியமருதுவைப் படைத்தளபதியாகவும், சின்ன மருதுவைப் பிரதானியாகவும் (முதலமைச்சர்) நியமனம் செய்து ஆட்சி நடத்தினார். அவரது ஆட்சியில் வேளாண்மை செழித்தது. ஆறுகளை அகலப்படுத்தினார். ராணி வேலுநாச்சியாரின் 10 ஆண்டு ஆட்சி, 1789 டிசம்பரில் முடிவுற்றது. அவர், தமது அறுபத்தாறாம் வயதில் 25.12.1796 இல் சிவகங்கையில் காலமானார்.

**பெண்ணாய் இருந்து படை நடத்தி, தனது படையில் பெண்களையும் அதிகம் சேர்த்து, வெற்றியும் பெற்று, ஆட்சியும் நடத்தி பெரும் பேர் பெற்றவர் வேலுநாச்சியார். கணவரை இழந்தும், நாடு பறிக்கப்பட்டும் துன்ப துயரங்களை அனுபவித்த போது சோர்வடையாமல், போராட முன் வந்தவர் வேலுநாச்சியார். பல்லாண்டு காலம் ஊருக்கு வெளியே இருந்து படை கட்டி, படை நடத்தி வென்று காட்டியதன் மூலமாக வீரமங்கை எனப் போற்றப்படுகிறார் வேலுநாச்சியார். அவருக்கு இன்று சிலை அமைத்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர்.**

விடுதலைப் போராட்டத் தியாகிகளை எந்நாளும் போற்றும் அரசாக திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்துள்ளது. சுதந்திர தினத்தின் 75 ஆவது ஆண்டு பெருவிழாவை வெகுசிறப்பாகக் கொண்டாடினார் முதலமைச்சர் அவர்கள். **செக்கிழுத்த செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரை பெருமைப்படுத்தும் வகையில் 13 அறிவிப்புகளை வெளியிட்டார். வ.உ.சி. மறைந்த நவம்பர் 18 தியாகத் திருவுருவ நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.** மகாகவி பாரதியார் மறைந்த நூற்றாண்டின் நினைவை முன்னிட்டு 14 அறிவிப்பினைச் செய்தார். உத்தரப்பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீட்டை பராமரிக்கவும் புதுப்பிக்கவும் அரசு சார்பில் 18 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிந்து ஒப்படைக்கப்பட்டது. கிண்டி காந்தி மண்டபத்தில் வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலையும், மருது சகோதரர்கள் சிலையும் அமைக்கப்பட்டுள்ளது. கடலூர் அஞ்சலை அம்மாள் சிலை வைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவிடங்களில் ஒலி, ஒளி காட்சிகள் அமைத்திட நடவடிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது. காந்தி மண்டபம், அருங்காட்சியகம், பெருந்தலைவர் காமராசர் மண்டபம், பெரியவர் பக்தவத்சலம் மண்டபம் ஆகியவற்றை மேம்படுத்த ரூ.3.36 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் அவர்களுக்கு திருப்பூர் மாவட்டத்தில் நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை அருங்காட்சியகம் வளாகத்தில் காந்தியடிகளின் நினைவுச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

**இந்த வரிசையில் தான் வீரமங்கை வேலுநாச்சியாரும் கழக அரசால் போற்றப்படுகிறார். கொண்டாடப்படுகிறார். வாழ்க வீரமங்கை வேலுநாச்சியாரின் புகழ்!**

••



திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம், ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சியில், இளைஞர் அணி அலுவலகம், முத்தமிழறிஞர் கலைஞர் சிலை மற்றும் கலைஞர் நூலகம் ஆகியவற்றை அமைப்பதற்காக, கழக இளைஞர் அணித் துணைச் செயலாளரும், ஈரோடு மக்களவைத் தொகுதி உறுப்பினருமான கே.இ.பிரகாஷ் ஏற்பாட்டில், இளைஞர் அணி அறக்கட்டளை பெயரில் வாங்கப்பட்டுள்ள இடத்துக்கான ஆவணங்களை கழக இளைஞர் அணிச் செயலாளர் – தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 20.9.2025 அன்று வழங்கி, வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வில் மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக் அவர்கள் உடனிருந்தார்.

# பாலஸ்தீனத்தில் மக்கள் அனுபவித்து வரும் கொடுமைகள் முடிவிற்கு வர ஒன்றிய அரசு உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்!

## நபிகள் நாயகம் 1500வது பிறந்த நாள் விழாவில் முதல்வர் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி



சென்னை, கலைவாணர் அரங்கில் நேற்று முன்தினம் (21.9.2025) நடைபெற்ற, நபிகள் நாயகம் அவர்களின் 1500வது பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விழாக் குழுவினர் நினைவுப் பரிசு வழங்கிச் சிறப்பித்தனர். இவ்விழாவில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, எஸ்.எம்.நாசர், முன்னாள் அமைச்சர் அ.அன்வர் ராஜா, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா, தமிழ்நாடு வக்ஃப் வாரிய தலைவர் கே.நவாஸ் கனி எம்.பி., ஆர்க்காடு இளவரசர் நவாப் முகமது அப்துல் அலி, சமுதாய ஒருங்கிணைப்பாளர் அப்பல்லோ ஹனிஃபா, மனிதநேய ஜனநாயக கட்சித் தலைவர் தமீமுன் அன்சாரி, எஸ்.டி.பி.ஐ. கட்சித் தலைவர் நெல்லை முபாரக், அரசு தலைமை ஹாஜி முகம்மது அக்பர், தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபைத் தலைவர் பி.ஏ.காஜா முயீனுத்தீன் பாகவி, விழாக்குழு உறுப்பினர் அ.முகம்மது காசிம் அனீஸ், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், முகமது ஷாநவாஸ், மு.அப்துல் வஹாப், ப.அப்துல் சமது, ஜே.எம்.எச்.அசன் மவுலானா, இஸ்லாமிய இயக்கத் தலைவர்கள், உலமாக்கள், மார்க்க அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

ஏராளமானதிட்டங்களை–முன்னெடுப்புகளைச் செய்துகொண்டு இருக்கிறோம்!

இப்போதும், இந்த மேடையில் பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டது. எஸ்.டி.பி.ஐ. கட்சி தலைவர் சகோதரர் நெல்லை முபாரக் அவர்கள் நபிகள் நாயகம் அவர்களைப்பற்றி பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். ஏற்கெனவே, பெருந்தகை அவர்களைப்பற்றி தமிழ்நாடு பாடநூலில் சேர்க்கப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற கோரிக்கைகளையெல்லாம் பரிசீலித்து பரிசு வழங்க வேண்டும் என்று சொன்னீர்கள். உறுதியாகப் பரிசீலிக்கப்படும். நியாயமான கோரிக்கைகளை நிச்சயமாக நிறைவேற்றித் தருவோம்.

### இஸ்லாமியர்க்கு இடர் என்றால் துணை நிற்கும் இயக்கம் தி.மு.க.!

அதுமட்டுமல்ல, இஸ்லாமியர்களுக்கு ஒரு இடர் வருகிறது என்றால், உங்களுக்குத் துணை நிற்கும் முதல் அரசியல் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்தான்!

குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராக, உண்மையான தோழமை உணர்வோடு போராடியது தி.மு.க.தான்! அந்தச் சட்டத்தால் யாராவது பாதிக்கப்பட்டார்களா என்று கேள்வி எழுப்பியதும் அந்தச் சட்டத்திற்கு எதிராகப் போராடிய இஸ்லாமியர்கள் மீது தடியடி நடத்தியதும் யார் என்று, உங்களுக்கு நன்றாகவே தெரியும்!

அதேபோல், முத்தலாக் சட்டத்தைக் கொண்டு வந்தபோது அ.தி.மு.க. எப்படி இரட்டை வேடம் போட்டது என்று எல்லோருக்கும் தெரியும்! அதனால்தான், நம்முடைய அன்வர் ராஜா போன்றவர்கள், துரோகத்தின் கூடாரமாக இருக்கும் கட்சிகளை புறக்கணித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்திருக்கிறார்கள்!

### இஸ்லாமியர்க்கு எதிரான சட்டங்கள்! தடை வாங்கியிருக்கிறோம்!

அதேபோல், வக்பு சட்டத் திருத்தத்திலும் அ.தி.மு.க. நடத்திய கபட நாடகத்தை எல்லோரும் பார்த்தார்கள்! ஆனால், தி.மு.க. உள்ளிட்ட இயக்கங்கள் நடத்திய சட்டப் போராட்டத்தால் தான் இன்றைக்கு, ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வந்த முக்கியத் திருத்தங்களுக்கு உச்ச நீதிமன்றத்தில் தடை வாங்கியிருக்கிறோம்!

பா.ஜ.க. செய்து வரும் மலிவான சர்வாதிகார எதேச்சாதிகார அரசியலுக்குத் துணை போகக்கூடிய துரோகத்தில் ஈடுபட்டுள்ளவர்களை புறக்கணிக்க வேண்டும்! நபிகள் நாயகத்தின் 1500ஆவது பிறந்தநாளை கொண்டாடும் இந்த விழா மேடையில் நின்று நான் இஸ்லாமிய மக்களுக்கு ஒரு உறுதியைத் தருகிறேன்.

### உங்களில் ஒருவராக தி.மு.க. என்றும் இருக்கும்!

இசுலாமிய மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பெற்றுத்தரும் இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் உங்கள் கூடவே உங்களில் ஒருவராக இருக்கும்!

நபிகளார் வலியுறுத்திய அன்பு, உலகெங்கும் அனைத்து உள்ளங்களிலும் பரவ வேண்டும்! போர்கள் அற்ற வன்முறைகள் அற்ற வெறுப்புகள் அற்ற ஆதிக்கம் அற்ற உலகமாக, நாம் வாழும் உலகம் மாற வேண்டும்!

நபிகளார் சொன்ன பொன்மொழிகளை வாழ்வியல் நடைமுறைகளாக மக்கள் கடைப்பிடிக்க வேண்டும்! எங்கும் அமைதியும் நல்லிணக்கமும் உண்டாக வேண்டும் என்று சொல்லி! உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பொன் முத்துராமலிங்கம் சிறப்புரை! திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்பு விளக்க பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வைரமணி – மேயர் அன்பழகன் பங்கேற்பு!

திருச்சி, செப். 23 –

திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு விளக்க பொதுக்கூட்டம் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன் தலைமையில் நடைபெற்றது.

பகுதிச் செயலாளர் நாகராஜ் வரவேற்றார். வட்டச் செயலாளர் புத்தூர் பவுல்ராஜ் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், தலைமைக் கழகப் பேச்சாளர் ஆடுதுறை உத்திராபதி, மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பொதுக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தரபாண்டியன், பழனியாண்டி, முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் அன்பில் பெரியசாமி, பரணிகுமார், மாவட்ட துணைச் செயலாளர் முத்துசெல்வம், குடமுருட்டி சேகர், ஒன்றியச் செயலாளர்கள் மாத்தூர் கருப்பையா, அந்த நல்லூர் கதிர்வேல், பகுதி செயலாளர்கள் மோகன்தாஸ் கமால் முஸ்தபா, காஜாமலை விஜய், ராம்குமார், மாநகர அயலக அணி அமைப்பாளர் துபேல் அகமது, மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் கிராப்பட்டி செல்வம், புத்தூர் தர்மராஜ், வர்த்தகர் அணி அமைப்பாளர் பி.ஆர். சிங்காரம், மீனவர் அணி மாவட்ட அமைப்பாளர் முள்ளிப்பட்டி பால்ராஜ்,

வர்த்தகர் அணி தொழிலதிபர் ஜான்சன் குமார், திருச்சி மாநகராட்சி மண்டலக் குழு தலைவர்கள் விஜயலட்சுமி கண்ணன், துர்கா தேவி, முன்னாள் பகுதிச் செயலாளர் தில்லைநகர் கண்ணன், மாநகரத் துணைச் செயலாளர் கவுன்சிலர் கலைச்செல்வி, மாவட்டப் பிரதிநிதிகள் வக்கீல் மணிவண்ண பாரதி, சோழன் சம்பத், வட்டச் செயலாளர்கள் வாமடம் சுரேஷ், மார்சிங் பேட்டை செல்வராஜ், தனசேகர், பி.ஆர்.பி.பால சுப்ரமணியன், மூவேந்திரன், கவுன்சிலர்கள் விஜயா ஜெயராஜ், கலைச்செல்வி, ராமதாஸ், புஷ்பராஜ், மஞ்சுளா பாலசுப்பிரமணியன், புங்கனூர் தாமோதரன்,

நிர்வாகி கள் பிராட்டியூர் மணிவேல், இன்ஜினியர் நித்தியானந்தம், பந்தல் ராமு, அரவானூர் தர்மராஜன், சர்ச்சில், கிங்,சோலை பாஸ்கர், எம்.ஆர்.எஸ். குமார், சிந்தாமணி பாலமுருகன், கருத்து கதிரேசன் உள்ளிட்ட பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தொண்டர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

பொதுக் கூட்டத்தில் ‘தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்’. ‘ஓரணியில் தமிழ்நாடு’ எனும் தலைப்பில் அனைவரும் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.




சென்னை, காமராஜர் அரங்கத்தில் நேற்று முன்தினம் (21.9.2025) நடைபெற்ற, தென்னிந்திய நடிகர் சங்கத்தின் 69 வது பொதுக்குழுக் கூட்டத்தில் சங்கத் தலைவர் எம்.நாசர், பொதுச் செயலாளர் விஷால், பொருளாளர் கார்த்தி, துணைத் தலைவர்கள் பூச்சி எஸ். முருகன், கருணாஸ் உள்ளிட்ட நிர்வாகிகள் முன்னிலையில், பழம்பெரும் நடிகை திருமதி எம்.என்.ராஜம் அவர்களுக்கு “வாழ்நாள் சாதனையாளர் விருது” வழங்கிக் கவுரவிக்கப்பட்டது. மேலும் கடந்த 2024–ஆம் ஆண்டுக்கான தேசிய விருதுகள் பட்டியலில் இடம்பெற்ற நடிகை ஊர்வசி, நடிகர்கள் எம்.எஸ்.பாஸ்கர், ஜி.வி.பிரகாஷ் மூவரும் இந்நிகழ்ச்சியில் பாராட்டி கவுரவிக்கப்பட்டனர்.